**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2021**

**A021 இலக்கணம் – 2 (சொல்)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1 இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2 இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. தனிமொழி என்றால் என்ன?
2. கண்ணன் வந்தான் (இத்தொடரை வினாப்பயனிலை ஆக்குக)
3. நிகழ்காலப் பெயரெச்சத்திற்கு ஒரு சான்று தருக.
4. பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?
5. இடைநிலைச் சொற்கள் எவ்வகைச் சொற்களைச் சார்ந்து வரும் தன்மை உடையது?
6. சாரியை என்றால் என்ன?
7. ஏகார இடைச்சொல் என்னென்ன பொருள்களில் வரும்?
8. பெயரெச்சத்தில் இடைப்பிற வரலுக்குச் சான்று தருக.
9. எதிர்கால வினை நிகழ்காலத்தில் வந்து மயங்குவதற்குச் சான்று தருக.
10. வினைப்பகுதியிலிருந்து தொழிற் பெயராவதற்குச் சான்று தருக.
11. உரிச்சொல் என்றால் என்ன?
12. திணைகள் மயங்குவதற்குக் காரணங்கள் யாவை?
13. கடிநுனைப் பகுதி – விளக்குக.
14. மதிப்புப்பன்மைக்கு ஒரு சான்று தருக.

15. வினை முற்றுச்சொல் எந்த ஆறு பொருள்களில் வரும்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. பெயரெச்சம், வினையெச்சம் பற்றி எழுதுக.
2. உடன்பாட்டு வினை எதிர்மறை வினைக்கு இரு சான்றுகள் தருக.
3. உவம உருபுகள் எத்தனை? அவை யாவை?
4. காலம் காட்டும் தொழில் பெயர்கட்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.
5. வியங்கோள் வினை எவ்வெப் பொருள்களில் வரும்?
6. முக்காலத்திற்கும் உரிய வினைச்சொல் பற்றி எழுதுக.
7. ஏகார இடைச்சொல் என்னென்ன பொருள்களில் வரும்?
8. வேற்றுமைப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) வினைச்சொற்கள் பற்றியும் வினை வகைகள் பற்றியும் இலக்கண நூலார் கூறும் கருத்துகளைச் சான்றுடன் விவரிக்க.

(அல்லது)

(ஆ) வேற்றுமைகளின் வகைகளையும் அவை தரும் பொருள்களையும் விரிவாக எடுத்துரைக்க.

2. (அ) இலக்கண வகைச் சொற்கள், இலக்கிய வகைச் சொற்கள் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) உரிச்சொல்லின் இலக்கணத்தையும் அதன் வகைகளையும் தொகுத்துரைக்க.

3. (அ) தொகைநிலைத் தொடர்களில் பொருள் சிறக்கும் இடம் பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) வழு – வழுநிலை – வழுமைதி ஆகியன தமிழ்மொழி சிறப்பதற்குக் காரணமாகின்றன என்பதைச் சான்று காட்டி விளக்குக.

******